**படல்கும்புற பிரதேச சபை - 2022**

------------------------------------------------------------

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

படல்கும்புற பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு படல்கும்புற பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்பட்டுள்ளதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலையான வைப்புக் கணக்கின் மீதி ரூபா 2,302,043 ஆக இருந்த போதும் அது நிதி நிலைமை தொடர்பான கூற்றில் ரூபா 2,246,108 என காண்பிக்கப்பட்டிருந்தது. | இவ் வேறுபாட்டுக்கு காரணம் வட்டி கணிப்பிடலில் உள்ள பிழையாகும் 2023 ஆம் ஆண்டின் போது கணக்குகள் தயாரிக்கும் போது குறித்த தவறை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன் | நிதிக் கூற்றுகளில் சரியான மீதி உள்ளடக்கப்பட வேண்டும் |
| (ஆ) | மீளாய்வாண்டிக்குரிய நிலையான வைப்புக்கான வட்டி ரூபா 190,861 ஆக இருந்த போதும் அது நிதி செயலாற்றல் கூற்றில் ரூபா 133,560 எனக் காண்பிக்கப் பட்டிருந்தது. | இவ் வேறுபாட்டுக்கு காரணம் வட்டி கணிப்பிடலில் உள்ள பிழையாகும் 2023 ஆம் ஆண்டின் போது கணக்குகள் தயாரிக்கும் போது குறித்த தவறை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | கணக்கிடல் சரியாக மேற்கொள்ளப்பட்டு நிதிக் கூற்றுக்கள் சரியான பெறுமதி உள்ளடக்கப்பட வேண்டும் |
| (இ) | மீளாய்வாண்டில் கடைகளை வாடகைக்கு வழங்கும் போது மீளச் செலுத்தப்படாத ரூபா 255,000 ஆன வைப்புத் தொகை திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | இது 2023 ஆம் ஆண்டின் போது கணக்குகள் தயாரிக்கும் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிய தருகின்றேன் | சபையின் வருமான விடயங்கள் சரியாக அடையாளம் காணப்பட வேண்டும் |
| (ஈ) | சபையின் கேட்போர் கூடத்திற்கு முத்தரப்பு மின்சார இணைப்பினை | இது 2023 ஆம் ஆண்டின் போது கணக்குகள் | சரியான பெறுமதி நிதிக்கூற்றுகளில் |

| | | | |
|---|---|---|---|
| | பெற்றுக் கொள்வதற்காக மீளாய்வாண்டில் செலவிடப்பட்டிருந்த ரூபா 226,990 தொகையை நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை | தயாரிக்கும் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிய தருகின்றேன் | உள்ளடக்கப்பட வேண்டும் |
| (உ) | சபையினால் பேணிச் செல்லப்பட்டிருந்த வைப்புக்கள் பதிவேட்டின் பிரகாரம் உடன்படிக்கை பிணை வைப்புக்கள் மீதி ரூபா 1,139,700 ஆக இருந்த போதும் அது நிதி நிலைமை தொடர்பான கூற்றில் ரூபா 1,218,475 என காண்பிக்கப்பட்டிருந்தது. | இது 2019 ஆம் ஆண்டின் கணக்குகளுக்காக தகவல்களை வழங்கும் போது இடம்பெற்ற தவறு ஒன்றாக இருப்பதால் அடுத்த ஆண்டில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன் | சரியான பெறுமதி நிதிக்கூற்றுகளில் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டிக்குரிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 5,328,312 ஆக இருந்த போதும் அது நிதிச் செயலாற்றல் கூற்றில் ரூபா 4,595,841 எனக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டின் கணக்கு போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறியத் தருகிறேன். | சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (எ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய முத்திரை கட்டணங்கள் மற்றும் நீதிமன்ற தண்டப்பணங்களின் கூட்டுத்தொகை 6,077,639 ஆக இருந்த போதும் அது நிதி நிலைமை தொடர்பான கூற்றில் 5,288,423 ஆக காண்பிக்கப்பட்டது. | இது 2023 ஆம் ஆண்டின் போது கணக்குகளை தயாரிக்கும் போது அப்பெறுமதியை சீராக்கு வதற்கு நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிய தருகின்றேன் | சரியான பெறுமதி நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட வேண்டும் |
| (ஏ) | மீளாய்வாண்டில் ஆதனங்கள் கையேற்றல் மற்றும் மேம்படுத்தலுக்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 2,918,412 ஆன மூலதனச் செலவினம் நிதி நிலைமைக் கூற்றில் ஆதனங்கள் பொறிகள் உப்கரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் போது நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிய தருகின்றேன் | சரியான பெறுமதி நிதி கூற்றுகளில் உள்ளடக்கப்பட வேண்டும் |
| (ஐ) | மீளாய்வாண்டின் நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டிருந்த பல்நோக்கு கட்டிடத்தின் முதலாவது பட்டியலின் பிரகாரம் உரிய ரூபா 919,657 ஆன பிடிகாசு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் போது நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிய தருகின்றேன் | அனைத்து பெருமானங்களும் நிதி கூற்றுகளில் உள்ளடக்கப்பட வேண்டும் |
| (ஒ) | பிரதேச சபை ஒத்துழைப்பு செயற்திட்டத்திற்குரிய மீளாய்வாண்டிற்காக கிடைத்திருந்த ரூபா 19,148,508 தொகை மூலதன மானிய பெறுவனவாக நிதி செயலாற்றல் கூற்றிலும் செயற்திட்டத்தின் கீழ் செலவிடப்பட்டிருந்த ரூபா | 2023 ஆம் ஆண்டின் போது நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிய தருகின்றேன் | அனைத்து வருமானங்களும் செலவினங்களும் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | |
|---|---|
| | 19,951,222 தொகை நிதி செயலாற்றல் கூற்றிலும் காண்பிக்கப்பட்டு இருக்கவில்லை |

### 1.6.2 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 321,408,417 கூட்டுப்பெறுமதியான 03 சொத்து விடயங்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடு, தொழில்சார் மதிப்பீட்டாளரின் அறிக்கைகள் மற்றும் அட்டவணைகள் என்பன நாளதுவரையாக்காமல் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதிருந்தது. | காணி மற்றம் கட்டிடங்கள் மதிப்பீடு செய்து 2023 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கும் ஆவணங்களை நாளதுவரையாக்கி சீராக்குவதற்கும் நடவடிக்கை எடுப்பதாக | சொத்துக்களின் பெறுமதியை சரியாக மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய வேண்டியதடன் ஆவணங்கள் அட்டவணைகளை நாளதுவரையாக பேணிச்செல்லல் வேண்டும் |

## 1.7 <u>இணக்கமின்மைகள்</u>

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்ளுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 24(1) (அ) பிரிவு | சபையினால் பேணிச் செல்லப்படும் வீதிப் பதிவேட்டில் உள்ள 251 வீதிகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்க வில்லை | வீதிப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட அனைத்து வீதிகளையும் 2023 ஆம் ஆண்டின் போது வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். | வீதிப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட வீதிகளை வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் 8 ஆம் பிரிவு மற்றும் 2009 ஏப்ரல் 17 ஆம் திகதிய 1597/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி | சபையினால் 2014 முதல் 2019 காலப் பகுதியில் அங்கீகரிக்கப் பட்டிருந்த 357 கட்டிட திட்டங்களைப் பரீட்சித்து இணக்கச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருக்க வில்லை | இணக்கச் சான்றிதழ்கள் வழங்குவதற்காக உரிய நபர்களுக்கு அறிவிப்புக்கள் மேற் கொள்ள்பபட்டுள்ளதுடன் சில கட்டிடங்களுக்காக இப்போதே இணக்கச் சான்றிதழ்கள் பெற்றுக் கொண்டுள்ளதுடன் எதிர்காலத்தில் அங்கீகரிக்கப்படும் கட்டிடதிட்டங்களுக்காக இணக்கச் சான்றிதழ் பெற்றுக் கொள்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது | அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களின் பிரகாரம் நிர்மாணங்கள் மேற்கொள்ளப் படுகின்ற கட்டிடங் களுக்காக இணக்கச் சான்றிதழ்களை விரைவில் வழங்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2010 ஆகஸ்ட் 17 ஆம் திகதிய மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர் சுற்றறிக்கை | சபையினால் பராமரிக்கப்படும் வீதி விளக்குகள் பதிவேட்டின் பிரகாரம் சபை அதிகாரப் பிரதேசத்தில் 485 வீதிவிளக்குகள் பொருத்தப்பட்டிருந்த போதும் வீதிவிளக்கு வெளிச்சமூட்டுதல் தொடர்பாக இலங்கை மின்சார சபையுடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்ட இருக்கவில்லை | வீதி விளக்குகளை பராமரிப்பு தொடர்பாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சுடன் உடன்படிக்கையை மேற்கொள்ள எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். . | குறித்த சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,409,424 ஆக இருந்ததுடன் அதனேடொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,735,625 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 1,150,200 | 911,857 | 718,998 | 192,859 | 966,200 | 896,357 | 654,130 | 242,227 |
| (ii) | வாடகை | 3,055,200 | 3,695,759 | 3,478,159 | 217,600 | 3,871,400 | 2,526,806 | 2,277,790 | 249,016 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 736,000 | 498,975 | 498,975 | - | 737,000 | 500,500 | 500,500 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 10,762,500 | 6,839562 | 3,742,510 | 3,097,052 | 10,092,500 | 4,982,088 | 3,084,035 | 1,898,053 |
| | | 15,703,900 | 11,946,153 | 8,438,642 | 3,507,511 | 15,667,100 | 8,905,751 | 6,516,455 | 2,389,296 |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட ரூபா 11,946,153 ஆன மொத்த வருமானத்தில் ஆண்டின் இறுதிவரை ரூபா 3,507,511 தொகை அறவிடப்படாதிருந்ததுடன் அது மொத்த பட்டியலிடப்பட்ட வருமானத்தில் 29 சதவீதமாக இருந்தது. | 2022 ஆம் ஆண்டின் பாதீட்டில் ஏனைய வருமான தலைப்பின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த ஊதா திருவனா படிவில் இருந்தான வருமானத்தை பெற்றுக் கொள்வதற்கு முடியாமல் இருந்தமை காரணமாக மதிப்பீட்டு நிலைமையில் விலகல் உருவாகுவதற்கான காரணங்கள் உள்ளதாக தயவுடன் அறியத் தருகிறேன். | பட்டியலிடப்பட்ட வருமானத்தை அறவிடுதல் வேண்டும். |
| (ஆ) | சபை அதிகார பிரதேசத்தில் தாபிக்கப்பட்டு இருந்த 06 தொலைத் தொடர்பு கோபுரங்களுக்குரிய முன்னைய ஆண்டுக்காக அறவிடப்பட வேண்டிய நிலுவை வியாபார வரி 42,000 தொகை 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அறவிடப்பட்டிருக்கவில்லை | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நிறுவனங்களுக்கு கடிதங்கள் அனுப்பியுள்ளதாக | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிட வேண்டும் |
| (இ) | பிரதேச சபைக்குரிய வத்தேயாய மற்றும் நாரம்வத்த ஆகிய நீர் முன்மொழிவு முறைமையில் 204 பாவனையாளர்களிடமிருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 242,359 ஆன நிலுவை நீர் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை தொகையை எதிர்காலத்தில் விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பேன் | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிட வேண்டும் |
| (ஈ) | மாகாண சபையின் பிரதான செயலளாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,561,313 மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 3,157,713 ஆக இருந்தது. | மீளாய்வண்டு நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணங்களை அறவிடுவதற்காக ஆவணங்களை உரிய நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாக தயவுடன் அறியத் தருகிறேன். | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிட வேண்டும் |
| (உ) | சபைக்கு சொந்தமான 03 இயந்திரங்களை வாடகைக்கு வழங்கியதற்காக 2017-2020 காலப்பகுதியில் குறித்த அறவிடப்பட வேண்டிய ரூபா 241,270 ஆன நிலுவை வாடகை வருமானம் அறவிடப்பட்டு இருக்கவில்லை | நிலுவை இயந்திர வாடகை எதிர்காலத்தில் விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறியத் தருகிறேன் | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிட வேண்டும் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) குடிநீரின் நியமம் மற்றும் தரத்தை பேணிச் செல்வதற்காக காணப்படும் இரண்டு நீர் செயற் திட்டங்களின் நீர் மாதிரிகளை பரீட்சிப்பதற்கு 2022 ஜனவரி மாதத்தில் சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகத்திற்கு நீர் மாதிரிகள் வழங்கப்பட்டிருந்த போதும் 2022 நவம்பர் 04 ஆம் திகதி வரையில் அந்த அறிக்கையை மீளப் பெற்றுக் கொள்ளப்பட்டு நீரின் தரம் தொடர்பாக உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | நீரின் நியமத்தை பரிசோதிக்கும் நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக தயவுடன் அறியத் தருகிறேன் | சபை மூலம் விநியோகிக்கப்படும் நீரின் தரம் மற்றும் நியமம் உயர்ந்த அளவில் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) 2016 ஆம் ஆண்டில் ரூபா 1,617,483 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த போகஹபெலஸ்ஸவில் நிர்மாணிக்கப்பட்ட 02 ஆம் இலக்க கடை, வீதி ஒதுக்கில் உள்ளதால் காணியின் உரித்தினை சபைக்கு கையேற்பதற்கு முடியாதிருந்தது. | அதனை 2023 ஆம் ஆண்டில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். | காணியின் உரித்தை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (இ) 2017 நவம்பர் 29 ஆம் திகதி கமநல சேவை நிலையத்தில் இருந்து பிரதேச சபைக்கு கிடைத்திருந்த சீன டிராக்டர் வண்டியின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இவ்வண்டியை படல்கும்புற மொ/ தேசிய பாடசாலையின் உயர்தர தொழில்நுட்ப கல்வி பிரிவிற்கு கையளிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக | சபைக்கு சொந்தமான சொத்துக்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சபையினால் பயன்படுத்தப் படுகின்ற 02 வாகனங்களின் சட்ட ரீதியாக உரித்து சபைக்கு பொறுப்பேற்கப்பட்டிருக்கவில்லை | கையேற்கப்படாத 2 வாகனங்களின் சட்ட ரீதியான உரிமையை கையேற்பதற்கு தேவையான நடவடிக்கை எதிர்காலத்தில் எடுக்கப்படும். | சபைக்கு சொந்தமான வாகனங்களின் சட்ட ரீதியான உரித்து பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) சபைக்கு உரிய வெவ்வேறு அளவிலான 78 காணிகள் அளவீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாது இருந்ததுடன் 98 காணிகளின் சட்ட ரீதியான | அளவீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற காணிகளைக் கையேற் பதற்காக பிரதேச செயலாளருக்கு | சபைக்கு சொந்தமான காணிகளின் அளவீட்டு நடவடிக்கைகளை |

| | | | |
|---|---|---|---|
| | உரித்தினை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | அறிவிக்கப்பட்டுள்ளதுடன் எஞ்சிய காணிக்காக உரித்தினை கையேற்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் எடுப்பதாக அறிய தருகின்றேன். | மேற்கொண்டு சட்ட ரீதியான உரித்தே உறுதிப்படுத்த வேண்டும். |
| (ஈ) | 2009 யூன் 12 ஆம் திகதி நடைபெற்ற விசேட பொதுச்சபை கூட்டத்தில் கழிவுப்பொருள் மீள் சுழற்சி நிகழ்த்திச்திட்டத்திற்காக பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்ட புஸ்ஸல்லாவ கிராம சேவையாளர் பிரிவின் வைகும்புறுவத்த காணியில் இருந்து 15 ஏக்கர் 2010 திசெம்பர் 14 ஆம் திகதி சபைக்கு உடமை கொள்வதற்கு கையளிக்கப் பட்டிருந்தது. காணி அளவீட்டு நடவடிக்கைகளுக்காக 2010 ஆம் ஆண்டின் போது ரூபா 120,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. 11 ஆண்டுகள் அளவிலான நீண்ட காலம் கடந்திருந்த போதும் குறித்த நிகழ்ச்சிகளை செயற் படுத்த முடியாமல் இருந்ததுடன் 2022 நவம்பர் 04 ஆம் திகதி வரையிலும் இக்காணியில் அத்துமீறிய 25 குடும்பங்கள் குடியேறியிருந்தன | புஸ்ஸல்லாவ கிராம சேவை சேவையாளர் பிரிவில் அமைந்துள்ள வைகும்புறுவத்த காணியில் கழிவுப் பொருள் மீள் சுழற்சி நிலையம் ஒன்றை செயல்படுத்தும் போது பொதுமக்கள் எதிர்ப்பு உருவாகியதால் செயற்படுத்துவதற்கு முடியாதிருந்தது எனினும் இக்காணியை பிரதேச சபைக்கு கையேற்று தருமாறு காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது. | சபைக்கு சொந்தமான காணிகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | புறநெகும செயற்திட்டத்தின் கீழ் ஹிங்குருகூடுவ உப காரியாலயத்திற்காக ரூபா 29,228,282 ஆன பெறுமதியுடன் கூடிய கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு ரூபா 1,479,300 பெறுமதியுடனான தளபாடங்கள் மற்றும் உபகரணங்களுடன் 2017 ஜுனில் சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதும் 2022 நவம்பர் வரை அதில் நூலகம் ஒன்று மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டு இருந்தது. | இக்கட்டிடத்திலிருந்து ஒரு பகுதி தற்போது ஆக்கபூர்வமாக செயற்பாடு களுக்கு பயன்படுத்தப்படுவ தாக தயவுடன் அறிய தருகிறேன். | சபைக்கு சொந்தமான சொத்துக்களை செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |